**செய்தி வெளியீடு எண் : 731** **நாள்: 06.05.2022**

# செய்தி வெளியீடு

**தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம், 1987–ல் சட்டம் மற்றும் விதிகள் 1991–இன் சீராய்வுக் குழுக் கூட்ட நாள் 06.05.2022**

தமிழ்நாட்டில் **1928**–ஆம் ஆண்டு **ராயல் கமிஷன்** ஏற்படுத்தப்பட்டு, அதன் பரிந்துரையின் பெயரில் **மெட்ராஸ் வணிகப்பயிர் சட்டம்**, 1933–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக **திருப்பூர் காட்டன் மார்க்கெட் கமிட்டி 1936–**ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பின்னர் **விழுப்புரம் மணிலா மார்க்கெட் கமிட்டி** மற்றும் **கோவில்பட்டி காட்டன் மார்க்கெட் கமிட்டி** ஆகியவற்றை ஏற்படுத்தி ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் நடைமுறைக்கு வந்தன.

தமிழகத்தில் வேளாண் விளைபொருள் விற்பனையை முறைப்படுத்திட **1933**–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்திற்குப் பிறகு சமூக பொருளாதாரத் தேவையை கருத்தில் கொண்டு **1959** மற்றும் **1987** –ஆம் ஆண்டுகளில் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டன, இச்சட்டங்களின் நோக்கம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திட ஏற்படுத்தப்பட்டவை.

தமிழ்நாட்டில் விவசாயிகள் தங்களுடைய வேளாண் விளைபொருளை எந்தவித சிரமமுமின்றி நியாயமான விலைக்கு விற்பனை செய்து பயனடைய ஏதுவாக 27 விற்பனைக்குழுக்களின் கீழ் 284 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம், 1987–ல் சட்டம் மற்றும் விதிகள் 1991–இன் படி ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

1987–ஆம் வருடத்திய சட்டத்தில் அவ்வப்போது ஏற்படும் சந்தை நிலவரத்திற்கு ஏற்றவாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவ்வாறாக மின்னணு சந்தை முறைக்கு அனுமதி அளித்தமை, வணிகர்களின் சிரமத்தினை போக்க மாநில அளவிலான ஒருங்கிணைந்த ஒற்றை உரிமம் மற்றும் ஒருமுனை மார்க்கெட் கட்டண வசூலிப்பு உள்ளிட்ட முன்னோடி சீர்திருத்தங்கள் பிப்ரவரி 2017–ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன. (தமிழ்நாடு சட்டம்–8, 2017).

அதன் தொடர்ச்சியாக வேளாண் விளைபொருட்களை விவசாயிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப, ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களிலும், இதர வணிக இடங்களிலும் விற்பனை செய்வதற்கு வழிவகுக்கும் வகையில் தமிழ்நாடு சட்டம் 31, 2020 இயற்றப்பட்டது.

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம், 1987–ல் சட்டம் மற்றும் விதிகள் 1991 நடைமுறைக்கு வந்து **ஏறத்தாழ 30 ஆண்டுகள் நிறைவுற்றுள்ள** நிலையில் தற்போதைய சந்தை நிலவரத்திற்கு ஏற்றவாறு வேளாண் விற்பனை சந்தையை மேம்படுத்திட, மேற்படி சட்டத்தைச் சீராய்வு செய்வது அவசியமானதாக உள்ளது என்பதால், மாநில வேளாண்மை விற்பனை சந்தை முறை மற்றும் அதன் வழிமுறைகளை உருவாக்க தேவையான மாற்றங்களுக்கான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் வழங்க அரசால் அமைக்கப்பட்ட **உயர்நிலை குழுவின் முதலாவது கூட்டம் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் தலைமையில் இன்று (06.05.2022) நடைபெற்றது**.

இக்கூட்டத்தில் குழுவில் இடம் பெற்றுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், உழவர்கள், வர்த்தகர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். மேலும், தமிழகத்தில் உள்ள விவசாயிகள், வியாபாரிகள் தங்களது கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை 06.06.2022–க்குள் கீழ்க்காணும் தகவல் தொடர்பு முறைகளில் குழுவுக்கு தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. வாட்ஸ்ஆப் எண். 93848 76300
2. உழவன் செயலி (Uzhavan App)
3. மின்னஞ்சல் முகவரி –agrimarketing.rm@gmail.com
4. தபால் மூலம் : வேளாண்மை இணை இயக்குநர்
   (ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்)
   வேளாண்மை விற்பனை மற்றும்
   வேளாண் வணிகத்துறை
   சிப்பெட்ரோடு, கிண்டி, சென்னை–600 032.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in